தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 13-10-2014

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மைப் பல்கலையில் வினாடிவினா போட்டி - 2014

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் மன்றத்தின் ஓர் அங்கமான சமுதாய நற்பணிமன்றம் கடந்த 61 ஆண்டுகளாக கிராமப்புற மாணவர்களுக்கு இலவச கல்விச் சேவை அளித்து வருகிறது.

இம்மன்றமானது ஒவ்வொரு ஆண்டும் கோவை மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு இடையேயான வினாடிவினா போட்டியினை நடத்தி வருகின்றது. அதேபோல நடப்பு ஆண்டிலும் வருகின்ற 2-11-2014 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 08.00 மணியளவில் இப்போட்டியினை நடத்த உள்ளது. மூன்று பிரிவுகளாக இப்போட்டி நடைபெறும். 6 முதல் 8, 9 மற்றும் 10, 11 மற்றும் 12 என மூன்று பிரிவுகளாக தமிழ் மற்றும் ஆங்கிலவழி மாணவர்களுக்கு தனியே நடைபெறும். எழுத்துத்தேர்வு நடத்தி அதில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு, வாய்மொழி சுற்று நடத்தப்பட்டு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இப்போட்டியில் தங்கள் பள்ளி மாணவ மாணவிகள் கலந்துகொள்ள, ஒருபிரிவுக்கு இரண்டு மாணவரின் பெயரை, **செயலர், சமுதாய நற்பணிமன்றம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்-641003** என்ற முகவரிக்கு வரும் 24-10-2014 மாலை 05.00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். மேலும் விண்ணப்ப படிவத்தை பதிவிறக்கம் செய்ய http://tnau.ac.in/agcbe/ssl/index.html என்ற மின்முகவரியினை பார்க்கவும்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள**

திரு. ந. சந்தோஷ்குமார் (செயலர்) – 75021 73329 / 94870 17846 (5.30pm- 8.30pm)

முனைவர். க. சிவசுப்ரமணியன் (மன்ற ஒருங்கிணைப்பாளர்) – 9443817342

மின்னஞ்சல் - **sslquiz2014@gmail.com**

மக்கள் தொடர்பு அலுவலர்